2002 ஏப்ரல் 4] [திருமதி பா. வளர்மதி]

என்கிற ஒரே காரணத்திற்காக, அதாவது அரசு ஆதரவும் இல்லாமல், தொண்டு நிறுவனங்களின் ஆதரவும் இல்லாமல் யாராவது ஒருவர் கையிலே அந்தக் குழந்தை போய்ச் சிக்கித் தவித்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட விதிகளை அரசு விதித்திருக்கிறது என்று அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 6. அறிவிப்பு

**கவன ஈர்ப்புகளுக்கான பதில்களைத் துறைகள் உரிய காலத்தில் அனுப்ப வலியுறுத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55(3)-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புகள் அனுமதிக்கப்பெற்ற நாளிலிருந்து 7 நாட்களுக்குள் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட முன்னறிவிப்புகளுக்கான விவர அறிக்கைகள் பெரும்பாலான துறைகளிடமிருந்து உரிய காலத்தில் அனுப்பிவைக்கப் பெறுவதில்லை என்று என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, அனுமதிக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளுக்கான விவர அறிக்கைகளைப் பேரவைச் செயலகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க துறைச் செயலாளர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்துத் துறை அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

**(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்**—தொடர்ச்சி

***திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி சம்பந்தமாகக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள். அதுபற்றி விளக்கம் சொல்கிறேன்.